# பதில் அளிக்கப்படாத ஜெபத்திற்குக் காரணங்கள்

*"நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் ... பெற்றுக் கொள்ளா மலிருக்கிறீர்கள்" (யாக். 4:3அ). எவ்வளவு அடிக்கடி இது உண்மையாய் இருந்துள்ளது! சிலர் தாங்கள் ஜெபம் பண்ணியும் பெற்றுக் கொள்ளாதபடியினால் தேவன் மீதுள்ள விசுவாசத்தை முற்றிலும் இழந்து போய் விடுகின்றார்கள். இன்னும் மற்றவர்கள் இதே காரணத்தினால் சந்தேகப்படத் தொடங்கி விடுகின்றார்கள். பதில் அளிக்கப்படாத ஜெபத்திற்குத் தேவன் மீது பழி போட வேண்டும் என்பது அவசியமாய் இருப்பதில்லை. ஆனால் உற்றுப் பார்க்க நாம் தயாராய் இருந்தால், மற்ற சில அதிகம் தர்க்கரீதியான முடிவு எப்பொழுதுமே உள்ளது. பதில் அளிக்கப்படாத ஜெபத்திற்கான காரணங்கள் என்ன?*

## ஜெபிக்கின்றவர் ஜெபிக்கத் தகுதியற்றவராய் இருக்கின்றாரா?

ஜெபிப்பதற்கு ஒரு நபர் தகுதியற்றுள்ளார் என்பது போன்ற விஷயம் இருக்கின்றது. ஜெபிப்பவர் முதலாவதாக தேவனுடைய பிள்ளையாய் இல்லையென்றால் இது உண்மையாய் உள்ளது. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன (எபே. 1:3). கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ள நபருக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை; அவர் தேவனுடைய பிள்ளையாயிருக்கின்றவர் பெற்றிருப்பது போல ஜெபம் செய்யும் சிலாக்கியம் பெற்றிருப்பதில்லை. "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" (நீதி. 28:9) என்று நாம் வாசிக்கின்றோம். இது கொடிய பாவங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு உண்மையானதாக இருக்கின்றது, ஆனால் இது, நல்லொழுக்கம் உடையவராய் இருந்தும் கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ள மனிதர்களின் விஷயத்திலும் உண்மையாய் இருக்கின்றது.

சத்தியத்தில் தம்மை வழிநடத்தும்படி தேவனிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்த கொர்நேலியு என்ற மனிதர் இந்த விதிக்கு விதிவிலக்காய்

*இருந்திருப்பார் (அப். 10:1-48). சுவிசேஷத்தை அவருக்குப் பிரசங்கிக்கும்படி பேதுருவை அவரிடத்தில் அனுப்பியதன் மூலம் தேவன் அவரது ஜெபத்திற்குப் பதில் அளித்தார்.*

*இரண்டாவது, ஒரு நபர் கடந்த நாட்களில் ஒரு காலத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கலாம், ஆனால் இப்பொழுது அவர் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தாதபடியினால் அவரால் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் ஜெபிக்க முடியாமல் இருக்கலாம். ஒருவேளை அவர் தேவனுடனான ஐக்கியத்திலிருந்து விலகிச் சென்றிருக்கலாம். நீதிமானுடைய ஜெபமே "மிகுந்த பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16). தேவனுடைய பிள்ளையாய் இருந்தும் தவறு செய்கின்றவர் ஜெபிக்கும் உரிமையைப் பெறு முன்னர் மனந்திரும்ப வேண்டும் (அப். 8:22).*

*நாம் மற்றவர்கள் மீது கொண்டுள்ள தவறான எண்ணத்தின் காரணமாக நமது ஜெபங்கள் அடிக்கடித் தடைப்படுகின்றன. நமக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை நாம் மன்னிக்கும் அளவுக்கு நமது பாவங்களுக்கான மன்னிப்பிற்கு நாம் ஜெபிக்க வேண்டியுள்ளது (மத். 6:12). தேவனுக்குக் காணிக்கை கொடுப்பதற்கு முன்பு சகோதரனோடு ஒப்புரவாகுதல் அவசியமாகும் என்று இயேசு போதித்தார் (மத். 5:24). புருஷர்கள் தங்கள் ஜெபங்களுக்குத் "தடை வராதபடிக்கு"த் தங்கள் மனைவியருக்குக் செய்ய வேண்டிய கனத்தைச் செய்ய வேண்டும் என்று பேதுரு கூறினார் (1 பேது. 3:7).*

*ஒரு ஜெபத்திற்குப் பதில் அளிக்கப்படவில்லையென்றால், அந்த ஜெபமானது விசுவாசமுள்ள இருதயத்தில் இருந்து வெளிப்படாததாக இருக்கலாம். சில வேளைகளில் நமது ஜெபங்கள் பதில் அளிக்கப்படும் என்று எதிர்பார்ப்பு நம்மிடம் இல்லாதிருப்பதால், அவைகள் பதில் அளிக்கப்படாதிருக்கலாம்! நமது ஜெபங்கள் விசுவாசத்தின் ஜெபங்களாய் இருக்க வேண்டும். "விசுவாசத்தில் கேளுங்கள்." சந்தேகத்தினால் அலைவுபடுகின்ற எவர் ஒருவரும், "காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறார்" (யாக். 1:6). ஜெபம் என்பது சோம்பேறித்தனமற்றதாக, பாதி இருதயத்தினுடையதல்லாமல், அல்லது மாறுபாடுள்ளதாயிராமல், ஊக்கமுள்ளதாக இருக்க வேண்டும் (யாக். 5:16). தேவனுடன் பேசுதல் என்பது "ஜெபம் சொல்லுதல்" என்பதைக் காட்டிலும் மேலானதாகும்.*

## ஜெபம் தேவனுடைய சித்தத்திற்கு எதிரானதாயுள்ளதா?

*பதில் அளிக்கப்படாத ஜெபத்திற்கான காரணத்தைப் பற்றிய நமது ஆராய்ச்சியில், இவ்விடத்தில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டாவது கேள்வி உள்ளது: ஜெபமானது தேவனுடைய சித்தத்திற்கு இசைந்ததாய் உள்ளதா? "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார்" என்று யோவான் எழுதினார் (1 யோவா. 5:14அ).*

*நமக்குத் துன்பம் தரும் எவற்றிற்காகவாவது நாம் ஜெபிக்கின்றோமா? அப்படியென்றால், தேவன் அதை நிறுத்தி வைக்க வேண்டும். நமக்கு அழிவைத் தரும் என்று அவர் அறிந்த பின்னரும் அம்மாதிரியானவற்றை நமக்குத் தர மாட்டார். நாம் இன்னும் அதிகம் ஏற்புடைய வகையில் ஜெபிப்பது எப்படி என்று அறிந்து கொள்வதற்காக தேவனுடைய வசனத்தை அதிகமாய்க் கற்க வேண்டியிருக்கின்றது. தேவனுடைய சித்தத்தைப் பற்றிப் பலர் மிகச் சிறிய அளவே அறிந்துள்ளபடியினால், ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஜெபித்தல் என்பது, அவர்களுக்குக் கடினமாய் இருக்கின்றது.*

## ஜெபம் தவறான நோக்கம் கொண்டுள்ளதா?

*ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஜெபத்திற்கு (தவறான) நோக்கம் என்பது சாத்தியமான தடையாக இருப்பதை யாக்கோபு சுட்டிக்காட்டினார்: ''நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக். 4:3) என்றுள்ளது. சுயநலத்திலிருந்து ஒரு ஜெபம் ஊற்றெடுத்தால், அதன் நோக்கம் நன்மையானதாய் இருப்பதில்லை. நாம் சிலவற்றிற்காகத் தேவனிடத்தில் ஜெபிக்கும் போது, "இதற்காக நான் ஜெபிப்பது ஏன்?" என்று நம்மையே நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதில் நாம் பதில் அளிக்கப்படாத பல ஜெபங்களுக்கான காரணத்தைக் காணலாம்.*

## முடிவுரை

*ஜெபங்கள் பதில் அளிக்கப்படாத போது தேவனைக் குற்றம் சாட்டுவதே ஒரு நபரின் முதல் மனத் தூண்டுதலாய் இருக்கலாம், ஆனால் மற்ற சாத்தியக் கூறுகளும் உள்ளன. உங்களையே நீங்கள் பரிசோதியுங்கள். உங்கள் நோக்கங்களைப் பரிசோதியுங்கள். நபரும், ஜெபங்களும் மற்றும் நோக்கமும் ஏற்புடையவைகளாய் இருந்தால், தேவன் கேட்பார். அவர் தமது சித்தத்தின்படியேயும், உங்களுக்கு மிகச் சிறந்தது என்ன என்பதின்படியேயும் பதில் அளிப்பார்.*

*"ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தாரும்" (லூக். 11:1).*